بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 5

இதழ் 15

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

15 ஷஃபான் 1441 ஹிஜ்ரி கமரி 09 ஷஹாதத் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி

09 ஏப்ரல் 2020


## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ فِىۡ خَلۡقِ السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ وَاخۡتِلَافِ الَّيۡلِ وَالنَّهَا لَاٰيٰتٍ لِّاُولِى الۡاَلۡبَابِ ۱۹۱

வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும், இரவும் பகலும் மாறிமாறி வருவதிலும் அறிவுடையோருக்கு நிச்சயமாகப் பல அடையாளங்கள் உள்ளன.

(3:191)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## நேர்வழியின் இலக்கை அடைய நேர்மறையான அறிவை செயல்படுத்தி இறைவனின் உதவியை கேட்க வேண்டும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### ஹிக்மத் (நுட்பம்) என்பதன் பொருள்

சில சந்தர்ப்பங்களில் நமது நண்பர்களுக்கு கிறித்தவர்களுடன் பழக நேரிடும். அறிவற்றவர்களின் எந்தவொரு விஷயமும் நுட்பமான இறைவனைக் குறிப்பிடும்படியாக இருக்காது என்பதை அவர்கள் காண்பார்கள். ஹிக்மத் என்பதன் பொருள் என்ன? வழ்வுஷ் ஷையி ஃபீ மஹில்லிஹீ. ஆனால் எந்த செயலும் கட்டளையும் இதனை மெய்ப்பிப்பதாக தெரியவில்லை என்பதை அவர்களில் பார்ப்பீர்கள். இஹ்தி நஸ்ஸிராத்தல் முஸ்தகீமின் மீது நாம் முழு கவனம் செலுத்தி பார்க்கும்போது சமிக்ஞையாக தெரியவருவது என்னவென்றால் வெளிப்படையாக இதிலிருந்து துஆ செய்யுமாறு கட்டளை உள்ளதாகத் தெரிகின்றது, ஸிராத்தல் முஸ்தகீம் எனும் நேர்வழி கேட்குமாறு போதனை உள்ளது. ஆனால் இய்யாக நஃபுது வ இய்யாக நஸ்தயீன் இதன் தலைமீது இருந்து கொண்டு இதிலிருந்து பயன் பெறுங்கள் எனக் கூறுகின்றது. அதாவது நேர்வழியின் இலக்கை அடைய நேர்மறையான அறிவை செயல்படுத்தி இறைவனின் உதவியை கேட்க வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 113 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### உண்மையான (அகப்)பார்வையை கேட்குமாறு வழிகாட்டல்

எனவே இய்யாக நஃபுது கூறுவது என்னவென்றால், ரப்புல் ஆலமீனே! உன்னால் முதலில் வழங்கப்படதையும் நாங்கள் பயனற்றதாக வீணாக்கவில்லை என்பதாகும். இஹ்தி நஸ்ஸிராத்தல் முஸ்தகீமில் இந்த வழிகாட்டல் உள்ளது. அதாவது மனிதன் இறைவனிடம் உண்மையான (அகப்)பார்வையை கேட்க வேண்டும். ஏனென்றால் அவனது அருளும் உதவியும் உடன் இல்லையென்றால் பலகீனமான மனிதன் எப்படிப்பட்ட இருளிலும் அந்தகாரத்திலும் சிக்கியுள்ளான் என்றால் அவனால் துஆ செய்யவே முடியாது. எப்போது வரை மனிதன் ரஹ்மானிய்யத்தின் அருளால் அவனுக்கு கிடைத்துள்ள இறைவனின் அந்த அருளை செயல்படுத்தி துஆ கேட்கவில்லையாயின் எந்த நல்ல விளைவும் ஏற்பட முடியாது.

சில நாட்கள் கடந்திருக்கும். நான் ஆங்கிலேய சட்டத்தில் இதைப் பார்த்தேன். அதாவது சலுகை பெறுவதற்கு முன்பாக சில பொருள்களைக் காட்டவேண்டியது அவசியமாக இருக்கின்றது. இவ்வாறே இயற்கைச் சட்டத்தின் பக்கம் பாருங்கள், எந்தவொன்று நமக்கு இதற்கு முன்பு கிடைத்ததோ அது என்ன செய்யப்பட்டது? அறிவு, சுயநினைவு, கண், காதை வைத்துக்கொண்டு வழிதவறவில்லையென்றால், முட்டாள்தனம் மற்றும் புத்தி பேதலிப்பின் பக்கம் செல்லவில்லையென்றால் துஆ செய்யுங்கள், மேலும் இறையருள் கிடைக்கும். இல்லையென்றால் இழப்பும் துர்பாக்கியமுமே மிஞ்சும்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:– www.alislam.org

### முக்கிய அறிவிப்பு

### ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்கள் தங்கள் கடிதங்களை பார்வையிட்டு தங்களுக்காக துஆ செய்கின்றார்கள்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு கடிதம் எழுதும் அனைத்து ஜமாஅத் சகோதர சகோதரிகளுக்கும் அறிவிக்கப்படுவதாவது:

வழக்கம்போல் தங்களின் அனைத்துக் கடிதங்களும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்களுக்கு முன் சமர்பிக்கப்படுகின்றன. எனினும் கொரோனா வைரஸ் தொடர்பாக இன்றைய நாட்களில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில் கடிதங்களுக்கு பதில் எழுதும் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. எனவே அந்த அனைத்துக் கடிதங்களுக்கும் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக பதில் அனுப்புவது சாத்தியமில்லை. ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்கள் தங்கள் கடிதங்களை பார்வையிட்டு தங்களுக்காக துஆ செய்கின்றார்கள்.

அல்லாஹ் கருணையும், அருளும் புரிவானாக. இந்தத் தொற்று நோய் மற்றும் ஏனைய சிரமங்கள் மற்றும் பிரச்சனைகள் மற்றும் கஷ்டங்களிலிருந்து அனைவரையும் பாதுகாப்பானாக. அனைவரையும் தனது பாதுகாப்பிலும் அடைக்கலத்திலும் வைப்பானாக. மேலும் எப்பொழுதும் அவனது அன்பின் பார்வை உங்கள் மீது இருக்கட்டுமாக. (முனீர் அஹ்மது ஜாவீது – தனிச்செயலர்)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**உஹது போரில் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் கொடியை பாதுகாப்பதில் தனது உரிமையை சிறப்பாக நிறைவேற்றினார்கள்**

**முஸ்அப் பின் உமைர் அவர்கள் மக்காவிற்கு வெளியே அனுப்பப்பட்ட முதல் இஸ்லாமிய முபல்லிக் ஆவார்கள்**

**பைஅத்தே அக்பா சந்தர்ப்பத்தின்போது மதீனாவிலிருந்து வந்திருந்த 12 நபர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கரங்களில் இவ்வாறு உடன்படிக்கை செய்தார்கள். அதாவது நாங்கள் இறைவனைத் தவிர வேறு எவனையும் நாங்கள் வணங்க மாட்டோம். நாங்கள் திருட மாட்டோம். ஒழுக்கக் கேடான செயலை செய்ய மாட்டோம். நாங்கள் எங்களது பெண் பிள்ளைகளை கொலை செய்ய மாட்டோம். நாங்கள் ஒருவர் மற்றவர் மீது பொய்யான குற்றச்சாட்டை சுமத்த மாட்டோம். மேலும் இறைவனது நபியின் மற்ற நல்ல போதனைகளுக்கு கட்டுப்படாமல் நடக்க மாட்டோம்**

**உஹது போரின் சந்தர்ப்பத்தின்போது இஸ்லாமிய படையை வழிநடத்தியவாறு ஷஹாதத் அந்தஸ்தை பெற்றவரும், பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வுமிக்க சஹாபியான ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையிலிருந்து நற்குறிப்பு**

**உலகத்தில் பரவி வருகின்ற கொரோனா வைரஸ் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய தற்காப்பு நடவடிக்கைகள் மற்றும் அறிவுரைகள் மற்றும் துஆவின் பக்கம் ஹுஸூர் அவர்கள் கவனமூட்டினார்கள்**

**கொடூரமான முறையில் ஷஹீதாக்கப்பட்ட லஹூரைச் சார்ந்த அகீல் அஹ்மது பட் அவர்களின் மகனான தன்ஸீல் அஹ்மது பட் (வக்ஃபே நவ்) மற்றும் ராவல்பிண்டி ஜமாஅத்தின் முன்னாள் அமீர் மதிப்பிற்குரிய பஷீர் அஹ்மது சாஹிப் மற்றும் பைஸிலாபாதைச் சார்ந்த டாக்டர் ஹமீதுத்தீன் சாஹிப் ஆகியோரின் வஃபாத் பற்றி குறிப்பை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறியவாறு இவர்களது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 06 மார்ச் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **06 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களைப் பற்றி எடுத்துக் கூறப்பட்டது. அவர்களைப் பற்றிய சில குறிப்புகள் எஞ்சியுள்ளது. அதனை இன்று நான் எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் மதீனாவிற்கு முபல்லிக்காக அனுப்பப்பட்டது மற்றும் அவர்கள் ஆற்றிய தொண்டுகள் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மீண்டும் மீண்டும் இப்போது ஹிஜ்ரத்திற்கான நேரம் நெருங்கி வந்து விட்டது என்ற தூதுச் செய்தி வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. மேலும் அன்னார் ஹிஜ்ரத் செய்ய இருக்கின்ற இடம் எப்படிப்பட்ட ஒரு நகரமாக இருக்குமென்றால் அங்கு கிணறுகளும், பேரீத்தம் பழ தோட்டங்களும் இருக்கும் என்ற விஷயமும் அன்னாருக்கு வெளிப்படுத்திக் காட்டப்பட்டது.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் ஹிஜ்ரத் செய்ய இருக்கின்ற இடம் யமாமாவாக இருக்கும் என்று கருதினார்கள். ஆனால் விரைவிலேயே அந்த இடத்தைப் பற்றிய எண்ணம் அவர்களது உள்ளத்திலிருந்து நீக்கப்பட்டது.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த எதிர்பார்ப்பில் இருந்தார்கள். அதாவது இறைவனது முன்னறிவிப்பிற்கேற்ப (ஹிஜ்ரத் செய்வதற்காக) எந்த இடம் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் அந்த இடத்தை இறைவன் இஸ்லாத்திற்காக சுவர்க்க பூமியாக ஆக்குவான் என்று எண்ணினார்கள்.

இதற்கிடையில் ஹஜ்ஜின் சந்தர்ப்பமும் வந்தது. அரபின் நாலா புறமிருந்தும் மக்கள் ஹஜ்ஜிற்காக ஒன்று கூட ஆரம்பித்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது பழக்கத்திற்கேற்ப அதாவது எங்கு சிலர் ஒன்று கூடியிருப்பதை அவர்கள் கண்டாலும் அவர்களிடம் சென்று அவர்களிடம் ஏகத்துவத்தைப் பற்றி எடுத்துக் கூறுவார்கள். மேலும் இறைவனது அரசாட்சி தொடர்பான நற்செய்தியை வழங்குவார்கள். மேலும் அநீதி, தீய செயல், குழப்பம் ஆகியவற்றிலிருந்து விலகி இருப்பதற்கான அறிவுரையை வழங்குவார்கள்.

சிலர் அன்னாரது பேச்சைக் கேட்டு வியப்பை வெளிப்படுத்தியவாறு சென்று விடுவார்கள். சிலர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும்போது மக்கத்துவாசிகள் அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி விடுவார்கள். மேலும் மக்கத்துவாசிகளின் கூற்றுக்களை முதலிலேயே கேள்விப்பட்டிருந்த சிலர் பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றைக் கேட்டு ஏளனப்படுத்தியவாறு அங்கிருந்து சென்று விடுவார்கள்.

இவ்வாறு அன்னார் மினா பள்ளத்தாக்கில் வலம் வந்து கொண்டிருந்தபோது மதீனாவில் வசிக்கக்கூடிய 6,7 நபர்களின் மீது அன்னாரது பார்வை பட்டது. பெருமானார் (ஸல்) அவர்களிடம், நீங்கள் எந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், (நாங்கள்) கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறினர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அது யூதர்களின் நட்புக் கோத்திரம் தானே? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், ஆம் என்று பதிலளித்தார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் சிறிது நேரம் அமர்ந்து எனது கூற்றைச் செவியேற்பீர்களா? என்று கேட்டார்கள். அந்த மக்கள் அன்னாரைப் பற்றி கேள்விப்பட்டிருந்தார்கள். மேலும் உள்ளத்தில் அன்னாரது வாதத்தைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் இருந்தது. அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றை ஏற்றுக்

கொண்டார்கள். மேலும் அன்னாருடன் அமர்ந்து அன்னாரது கூற்றை கேட்கத் தொடங்கினர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களிடம், இறைவனது அரசாட்சி மிக விரைவில் வர இருக்கின்றது. இனி சிலைகள் உலகிலிருந்து அழிக்கப்படும். உலகத்தில் ஏகத்துவம் நிலைநாட்டப்படும். நன்மையும், இறையச்சமும் மீண்டும் ஒரு முறை உலகத்தில் நிலைநாட்டப்படும். மதீனத்து மக்கள் இந்த விலைமதிப்புமிக்க அருட்கொடையை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கின்றார்களா? என்று கேட்டார்கள்.

அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றைக் கேட்டு மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகினார்கள். மேலும் கூறினார்கள்: உங்களது போதனையை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் மதீனா இஸ்லாத்திற்கு அடைக்கலம் கொடுக்கின்றதா? இல்லையா? என்பது தொடர்பாக நாங்கள் எங்களது சமுதாயத்திடம் சென்று எடுத்துரைப்போம். அடுத்த வருடம் எங்கள் சமுதாயத்தின் முடிவு தொடர்பாக உங்களிடம் தெரிவிப்போம் என்று கூறினர்.

பிறகு இம்மக்கள் திரும்பிப் சென்று தமது உறவினர்களிடமும், நண்பர்களிடம் பெருமானார் (ஸல்) அவர்களின் போதனையைப் பற்றி எடுத்துக் கூற ஆரம்பித்தனர். அந்த சந்தர்ப்பத்தில் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் ஆகிய இரண்டு அரபு கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் மதீனாவில் வசித்து வந்தனர். மேலும் யூதர்களின் பனூ குரைழா, பனூ நஸீர் மற்றும் பனூ கைனுகா என்ற மூன்று கோத்திரனரும் வசித்து வந்தனர்.

அதுமட்டுமின்றி அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தினருக்கிடையே சண்டைகளும் இருந்தன. பனூ குரைலா, பனூ நஸீர் ஆகிய கோத்திரங்கள் அவ்ஸ் கோத்திரத்தினருடனும், மேலும் கஸ்ரஜ் மற்றும் பனூ கைனுகா கோத்தினரத்தினருடனும் சேர்ந்திருந்தன. நீண்ட கால சண்டைக்குப் பிறகு இப்போது நாம் சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்று அவர்கள் எண்ணினர்.

இறுதியில் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவரான அப்துல்லாஹ் பின் அபீ பின் சலூலை முழு மதீனாவும் தனது அரசராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஏகோபித்த முடிவை அவர்கள் எடுத்தனர்.

யூதர்களுடனான தொடர்பின் காரணமாக அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் பைபிளின் முன்னறிவிப்பை செவியுற்று வந்தார்கள். யூதர்கள் சுயமே தமது கஷ்டங்களையும், துன்பங்களையும் எடுத்துக் கூறும்போது அதன் இறுதியில் மூஸாவைப் போன்ற ஒரு நபி வர இருக்கின்றார். அவரது வருகையின் நேரம் மிக நெருங்கி வருகின்றது. அவர் வரும்போது நாம் மீண்டும் ஒரு முறை உலகத்தில் வெற்றி பெறுவோம். யூதர்களின் எதிரிகள் அழிக்கப்படுவார்கள் என்று கூறுவார்கள்.

மதீனாவாசிகள் இந்த ஹாஜிகளிடமிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாதத்தை செவியுற்றபோது அன்னாரது உண்மைத்துவம் அவர்களது உள்ளத்தில் பதிந்தது. மேலும் அவர்கள், யூதர்கள் எங்களுக்கு எடுத்துக் கூறி வந்த அந்த நபி இவர்தான் என்பது எங்களுக்கு தெரிய வருகிறது என்று கூறினர். அதிகப்படியான இளைஞர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளைக் கேட்டு அதன் தாக்கத்திற்கு ஆளாகினர். மேலும் யூதர்களிடமிருந்து அவர்கள் செவியுற்றிருந்த அந்த முன்னறிவிப்புகள் இவர்கள் ஈமான் கொள்வதற்கு உதவியாக அமைந்தது.

எனவே அடுத்த ஆண்டு ஹஜ்ஜின் சந்தர்ப்பத்தின்போது மதீனாவிலிருந்து வந்தனர். நாம் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது மார்க்கத்தை ஏற்றுக் கொள்வோம் என்று 12 நபர்கள் இந்த எண்ணத்தில் வந்திருந்தனர். இவர்களில் 10 நபர்கள் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். 2 நபர்கள் அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். அவர்கள் மினாவில் பெருமானார் (ஸல்) அவர்களை சந்தித்தார்கள். மேலும் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் கரங்களில் இந்த உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

அதாவது அவர்கள் இறைவனைத் தவிர வேறு யாரையும் வணங்க மாட்டோம். திருட மாட்டோம். வெட்கக்கேடான செயல்களை செய்ய மாட்டோம். தமது பெண் குழந்தைகளை கொலை செய்ய மாட்டோம். ஒருவர் மற்றவர் மீது பொய்யான குற்றச்சாட்டை சுமத்த மாட்டோம். மேலும் நபியின் மற்ற போதனைகளில் கட்டுப்படாமல் இருக்க மாட்டோம். இந்த விஷயத்தில் இவர்கள் உறுதிமொழி எடுத்தார்கள்.

இந்த மக்கள் திரும்பிச் சென்று இதை விட அதிகமாக தப்லீக் செய்ய தொடங்கினார்கள். மதீனாவின் வீடுகளிலிருந்து சிலைகளை வெளியில் எடுத்து எறிந்தார்கள். சிலைகளுக்கு முன்னால் கழுத்தை குனிந்திருந்தவர்கள் தமது தலையை உயர்த்திக் கொண்டு செல்ல ஆரம்பித்தனர். இறைவனைத்தவிர வேறு யாருக்கு முன்பாகவும் இவர்கள் தமது தலையை குனியச் செய்ய ஆயத்தமாக இல்லை. யூதர்கள் வியப்பில் ஆழ்ந்தனர். நூற்றாண்டு காலமாக இருக்கின்ற நட்பு மற்றும் பல நூற்றாண்டாக நாம் செய்து வருகின்ற தப்லீக்கின் விளைவால் நம்மால் ஏற்படுத்த முடியாத மாற்றத்தை இஸ்லாம் சில நாட்களிலேயே ஏற்படுத்தியது. ஏகத்துவத்தின் ஓசை மதீனாவாசிகளின் ஒவ்வொரு வீட்டிலும் சென்று சேர்ந்தது.

ஒருவர் பின் ஒருவராக முஸ்லிம்களிடம் வந்து, எங்களுக்கு உங்களது மார்க்கத்தைக் கற்றுக் கொடுங்கள் என்று கூறினர். ஆனால் மதீனாவில் இஸ்லாத்தை புதிதாக ஏற்றுக் கொண்டிருந்தவர்கள் இஸ்லாமிய போதனைகளைப் பற்றி முழுமையாக அறியாதவர்களாக இருந்தார்கள். மேலும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அவர்கள் இஸ்லாத்தைப் பற்றி எடுத்துக் கூற இயலாதவர்களாகவும் இருந்தார்கள். எனவே அவர்கள் மக்காவிற்கு ஒருவரை அனுப்பி ஒரு முபல்லிக்கை அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள்.

எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அபிஸீனியாவிலிருந்து திரும்பி வந்திருந்த முஸ்அப் என்ற பெயருடைய ஒரு சஹாபியை மதீனாவிற்கு தப்லீக் செய்வதற்காக அனுப்பி வைத்தார்கள். முஸ்அப் அவர்கள் மக்காவிற்கு வெளியே அனுப்பப்பட்ட முதல் இஸ்லாமிய முபல்லிக் ஆவார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 214–216)

இதைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள்: மதீனாவாசிகளுக்கு

### திருக்குர்ஆனிலிருந்து...

நம்முடைய வசனங்களை மறுத்தவர்கள் காரிருளில் உள்ள செவிடர்களும், ஊமையர்களுமாவர். அல்லாஹ் தான் நாடுபவரை அழித்து விடுகின்றான்; மேலும் தான் நாடுபவரை நேர்வழியில் நடத்துகிறான். (6:40)

Faizal Hameed Ilahi, Tittacherry

இஸ்லாத்தைப் பற்றி தெரிய வந்ததும் ஒரு ஹஜ்ஜின் சந்தர்ப்பத்தில் சில மதீனாவாசிகள் பெருமானார் (ஸல்) அவர்களை சந்தித்து அன்னாரது உண்மைத்துவத்தை ஏற்றுக் கொண்டார்கள். எனவே அவர்கள் திரும்பிச் சென்று தனது சமுதாயத்திடம் இதுபற்றி எடுத்துக் கூறினார்கள். அதாவது யூதர்கள் எந்த நபியின் வருகையைப் பற்றி எடுத்துக் கூறி வந்தார்களோ அவர் மக்காவில் பிறந்து விட்டார்கள்.

எனவே இவ்விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பக்கம் அவர்களுக்கு கவனத்தை ஏற்படுத்தியது. எனவே அவர்கள் ஒரு குழுவை அமைத்து அன்னாரிடம் அனுப்பி வைத்தார்கள். இந்த குழு அன்னாருடன் கருத்துப் பரிமாற்றம் செய்தபிறகு அன்னாரை ஏற்றுக் கொண்டது. மேலும் அன்னாரிடம் பைஅத் செய்தது. ஏனென்றால் அப்போது மக்காவில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கடுமையான எதிர்ப்பு இருந்தது. மேலும் இந்த சந்திப்பு மக்காவாசிகளுக்குத் தெரியாமல் ஒரு பள்ளத்தாக்கிற்கு கீழே நடந்தது. மேலும் அங்குதான் பைஅத்தும் நடந்தது. எனவேதான் இதனை பைஅத்தே அக்பா என்று கூறுகின்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவாசிகளின் நம்பிக்கையாளர்களிடம் அமைப்பை ஏற்படுத்துவதற்காக ஒரு மேலதிகாரியை நியமித்தார்கள். மேலும் இஸ்லாத்தைப் பரப்புவதற்காகவும் கவனமூட்டினார்கள். மேலும் இவர்களுக்கு உதவி செய்வதற்காக மேலும் அங்குள்ள முஸ்லிம்களுக்கு மார்க்கத்தைக் கற்றுக் கொடுப்பதற்காக ஒரு இளைய சஹாபி ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களை அனுப்பி வைத்தார்கள்.

இவர்கள் இங்கிருந்து வெளியேறியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், நீங்கள் மக்காவை விட்டு வெளியேற வேண்டியது வந்தால் பிறகு மதீனாவிற்கு வருகை தாருங்கள் என்றும் அழைப்பும் கொடுத்து விட்டுச் சென்றார்கள். இவர்கள் மதீனா சென்றடைந்த சிறிது காலத்திலேயே மதீனாவில் இஸ்லாம் பரவியது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மேலும் சில சஹாபாக்களை மதீனாவிற்கு அனுப்பி வைத்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இருந்தார்கள். இதற்குப் பிறகு ஹிஜ்ரத் செய்வதற்காக கட்டளை வந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஹிஜ்ரத் செய்து அங்கு சென்றார்கள். அவர்கள் அங்கு சென்ற சிறிது காலத்திலேயே இணை வைப்வர்களாக திகழ்ந்த மதீனாவாசிகள் முஸ்லிம்களாயினர்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 1 பக்கம் 171)

மதீனா ஹிஜ்ரத் செய்யப்பட்ட பிறகு முஸ்அப் பின் உமைர் அவர்களுக்கும் அபூ அய்யூப் அன்ஸாரி அவர்களுக்கும் இடையே சகோதரத்துவ பந்தத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்படுத்தினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 88 முஸ்அப் பின் உமைர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் பத்ர் மற்றும் உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். பத்ர் மற்றும் உஹது போர்களில் முஹாஜிரீன்களின் கொடி ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களின் கரங்களில்தான் இருந்தது. பத்ர் போரில் முஹாஜிரீன்களின் மிகப்பெரிய கொடியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்அப் பின் உமைர் அவர்களின் கரங்களில்தான் கொடுத்திருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 89 முஸ்அப் பின் உமைர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்னொரு அறிவிப்பு இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் எழுதியுள்ளார்கள்: உஹது போரிலும் முஹாஜிரீன்களின் கொடி ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களின் கைகளில்தான் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய படையின் ஸஃப்பை சரி செய்தார்கள். மேலும் பல குழுக்களுக்கு தனித்தனி அமீர்மார்களை நியமித்தார்கள்.

அந்த சமயத்தில் குரைஷிகளின் கொடி தல்ஹா அவர்களிடம் இருக்கின்றது என்ற தகவல் அன்னாருக்கு கொடுக்கப்பட்டது. இதை அறிந்த பெருமானார் (ஸல்) அவர்கள், நாம் சமுதாய பற்றுணர்வை வெளிப்படுத்திக் காட்டுவதில் உரிமை படைத்தவர்களாக இருக்கின்றோம் என்று கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் அலி அவர்களிடமிருந்து முஹாஜிரீன்களின் கொடியை பெற்று முஸ்அப் பின் உமைர் அவர்களிடம் கொடுத்தார்கள். இவர்களும் தல்ஹா அவர்கள் எந்த குடும்பத்துடன் தொடர்பு வைத்திருந்தார்களோ அதே குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 488)

ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் உஹது போரில் ஷஹீதானார்கள். உஹது போர் நாளன்று ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்பு நின்று கொண்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். மேலும் சண்டையிட்டவாறு ஷஹீதானார்கள். இப்னு கமிய்யா என்பவன் அன்னாரை ஷஹீதாக்கினான்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 383 கஸ்வா உஹது – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

வரலாற்றில் வருகின்றது. அதாவது உஹது போர் நாளன்று ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் கொடியை பாதுகாப்பதில் தனது உரிமையை முழுமையாக செலுத்தினார்கள். உஹது போர் நாளன்று ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்கள் கொடியை ஏந்திப் பிடித்திருந்தார்கள். அப்போது இப்னு கமிய்யா குதிரையில் பயணம் செய்தவாறு எந்த கையில் ஹஸ்ரத் முஸ்அப் அவர்கள் கொடியை வைத்திருந்தார்களோ அதாவது வலது கையின் மீது தாக்குதல் தொடுத்தான். மேலும் கையை வெட்டினான். அப்போது ஹஸ்ரத் முஸ்அப் அவர்கள் இந்த வசனத்தை ஓதினார்கள்:

وَمَا مُحَمَّدٌ إِلَّا رَسُولٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ۚ

பிறகு அன்னார் கொடியை இடது கையில் பிடித்தார்கள். பிறகு இப்னு கமிய்யா இடது கையில் தாக்குதல் தொடுத்தான். பிறகு அன்னார் இரண்டு கைகளின் மூலமாக தமது நெஞ்சில் இஸ்லாமிய

## திருக்குர்ஆனிலிருந்து...

நாம் உமக்கு முன்னுள்ள சமுதாயங்களுக்கும் நிச்சயமாக (தூதர்களை) அனுப்பினோம். அத்தூதர்கள் வந்த பின்னர் அவர்கள் பணிவை மேற்கொள்ளும் பொருட்டு துன்பம், துயரம் ஆகியவற்றால் நாம் அவர்களைப் பிடித்துக் கொண்டோம். (6:44)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

கொடியை ஏந்தினார்கள். பிறகு இப்னு கமிய்யா மூன்றாவது முறையாக அன்னாரின் நெஞ்சில் தாக்குதல் தொடுத்தான். எனவே முஸ்அப் அவர்கள் கீழே விழுந்தார்கள். அப்போது அப்துத் தார் கோத்திரத்தைச் சார்ந்த சுவைத் பின் சஅத் பின் ஹர்மலா மற்றும் அபூரூம் பின் உமைர் ஆகிய இருவரும் முன் வந்தார்கள். அப்போது கொடியை அபூரூம் பின் உமைர் அவர்கள் பிடித்தார்கள். முஸ்லிம்கள் திரும்பி வரும் வரை இவர்களிடம்தான் கொடி இருந்தது. மேலும் மதீனாவிற்குள் நுழைந்தனர்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 89 முஸ்அப் பின் உமைர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஷஹாதத்தின்போது அன்னாரது வயது 40 வயது அல்லது அதை விட சற்று அதிகமாக இருந்தது.

(அஸதுல் காபா ஃபி மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 176 முஸ்அப் பின் உமைர் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

அதாவது குரைஷி படையைச் சார்ந்தவர்கள் நாலா புறமும் சூழ்ந்து கொண்டனர். தொடர்ச்சியாக தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்தனர். இருப்பினும் முஸ்லிம்கள் சிறிது நேரத்தில் மீண்டு வந்திருக்கலாம். ஆனால் குரைஷிகளின் ஒரு படை வீரர் அப்துல்லாஹ் பின் கமிய்யா என்பவன் முஸ்லிம்களின் படை வீரரான முஸ்அப் பின் உமைர் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தான். அவனது வாளைக் கொண்டு அன்னாரது வலது கையை வெட்டினான். முஸ்அப் அவர்கள் உடனடியாக தனது இடது கையால் கொடியை ஏந்திப் பிடித்தவாறு இப்னு கமிய்யாவை எதிர்த்து சண்டையிட முன்னேறினார்கள்.

ஆனால் அவன் இரண்டாவது முறையாக தாக்குதல் தொடுத்து அன்னாரது இரண்டாவது கையையும் வெட்டினான். பிறகு முஸ்அப் அவர்கள் வெட்டப்பட்ட இரண்டு கைகளையும் ஒன்றிணைத்து கீழே விழுந்தவாறு இஸ்லாமிய கொடியை ஏந்திப் பிடிக்க முயற்சி செய்தார்கள். மேலும் கொடியை தனது நெஞ்சுடன் அணைத்துப் பிடித்தார்கள். அப்போது இப்னு கமிய்யா மூன்றாவது முறையாக அன்னார் மீது தாக்குதல் தொடுத்தான். இந்த முறை முஸ்அப் அவர்கள் ஷஹீதாகி கீழே விழுந்தார்கள்.

இன்னொரு முஸ்லிம் கொடியை முன் வந்து பிடித்தார். ஆனால் முஸ்அப் அவர்களின் தோற்றம் பெருமானார் (ஸல்) அவர்களை ஒத்திருந்தது. எனவே இப்னு கமிய்யா, நான் முஹம்மது (ஸல்) அவர்களைத்தான் கொலை செய்து விட்டேன் என்று கருதினான். அல்லது ஏமாற்றுவதற்காக கூட அவன் இந்த சூழ்ச்சியை செய்திருக்கலாம்.

எவ்வாறிருப்பினும் அவன் முஸ்அப் அவர்களைக் கொலை செய்த பிறகு நான் முஹம்மது (ஸல்) அவர்களை கொலை செய்து விட்டேன் என்று கூச்சலிட்டான். மேலும் இந்த செய்தியைக் கேட்டு முஸ்லிம்கள் தடுமாறினர். மேலும் அவர்களின் கூட்டம் இங்கும் அங்கும் சிதறியது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 493)

உஹது போரில் முஸ்லிம்களின் தைரியம் வலுவிழந்ததற்கு இதுவும் ஒரு மிக முக்கிய காரணமாகும். ஆனால் பிறகு அவர்கள் ஒன்றிணைந்தனர். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்அப் அவர்களின் உடலுக்கு அருகில் சென்றார்கள். அவர்களுக்கு அருகில் சென்று நின்றவாறு பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த வசனத்தை ஓதினார்கள்:

مِنَ الْمُؤْمِنِيْنَ رِجَالٌ صَدَقُوْا مَا عَاهَدُوا اللّٰهَ عَلَيْهِ ۚ فَمِنْهُمْ مَّنْ
قَضٰى نَحْبَهٗ وَمِنْهُمْ مَّنْ يَّنْتَظِرُ ۖ وَمَا بَدَّلُوْا تَبْدِيْلًا ۝٢٤

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களுள் தாங்கள் அல்லாஹ்விடம் செய்திருந்த வாக்குறுதியினை உண்மைப்படுத்திய மனிதர்கள் உள்ளனர். அவர்களுள் சிலர் (தாங்கள் போர் செய்து மரணமடைய வேண்டும்) என்ற தங்கள் எண்ணத்தை நிறைவேற்றியுள்ளனர். அவர்களுள் மற்றுஞ்சிலர் (இன்றும் அதனை) எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் (தங்கள் எண்ணத்தில்) சிறிதும் மாற்றம் ஏற்படுத்தவில்லை. (33:24)

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவனது ரஸூல் சாட்சி கூறுகின்றார். அதாவது நீங்கள் கியாமத் நாளன்று அல்லாஹ்வின் அருகில் ஷுஹதாக்களாக திகழ்வீர்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாக்களைப் பார்த்து, முஸ்அப் அவர்களை பார்க்க வாருங்கள். மேலும் அவர் மீது சலாத்தை அனுப்புங்கள். எந்த இறைவனின் கையில் எனது உயிர் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! கியாமத் நாள் வரை எவர் ஒருவர் இவர் மீது சலாத்தை அனுப்புவாரோ இவர்கள் அந்த நபரின் சலாத்திற்கு பதில் கூறுவார்கள்.

ஹஸ்ரத் முஸ்அப் அவர்களின் சகோதரரான ஹஸ்ரத் அபூரூம் பின் உமைர், ஹஸ்ரத் சுவைத் பின் சஅத் மற்றும் ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ ஆகியோர் ஹஸ்ரத் முஸ்அப் அவர்களை கபரில் இறக்கினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 89,90 முஸ்அப் பின் உமைர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

உஹது போரில் ஷஹீதானவர்களில் ஒருவர் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் ஆவார்கள். முஹாஜிர்களில் மதீனாவிற்கு முதல் முறையாக அனுப்பப்பட்ட முபல்லிக்காக அன்னார் திகழ்ந்தார்கள். அறியாமைக் காலத்தில் மக்காவில் முஸ்அப் அவர்கள் மிகவும் உயர் தரமான ஆடைகளை அணிபவராக இருந்தார்கள். மிகவும் செல்வ செழிப்பான நிலையில் வாழ்ந்து வந்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு இவர்களது நிலைமை முற்றிலும் மாறி விட்டது.

அறிவிப்பில் வருகின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் இவர்களது உடலில் ஒரு முறை ஒரு ஆடையைப் பார்த்தார்கள். முஸ்அப் அவர்களின் முன்புள்ள வாழ்க்கையை நினைவு கூர்ந்து

**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்முடைய வசனங்களைப் பொய்யாக்குவோருக்கு அவர்களின் கட்டுப்படாத நிலை காரணத்தினால் நமது தண்டனை அவர்களைப் பற்றிக் கொள்ளும். (6:50)

A.Basheer Ahmad, Melapalayam

அன்னாரது கண்கள் கண்ணீரினால் நிரம்பியது. உஹது போரில் முஸ்அப் அவர்கள் ஷஹீதானபோது அவர்களது உடலை மறைப்பதற்கு கூட அவர்களிடம் ஆடை இல்லாமல் இருந்தது. கால்களை மறைத்தால் அவர்களது தலையை மறைக்க முடியாது. தலையை மறைத்தால் கால்களை மறைக்க முடியாது. எனவே பெருமானார் (ஸல்) அவர்களின் கட்டளையின்படி அவர்களின் தலையை ஆடையைக் கொண்டும், கால்களை புற்களைக் கொண்டும் மூடப்பட்டது.

புகாரியில் இந்த அறிவிப்பு வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களுக்கு முன்பாக இஃப்தார் சமயத்தில் உணவு கொண்டு வரப்பட்டது. அப்போது அவர்கள் நோன்பு வைத்திருந்தார்கள். அவர்கள் கூறினார்கள்: முஸ்அப் பின் உமைர் அவர்கள் ஷஹீதனார்கள். அவர்கள் என்னை விட சிறந்தவர் ஆவார்கள். அவர்கள் ஒரேயொரு போர்வையைக் கொண்டு அடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களது தலையை மூடினால் அவர்களது கால்கள் தெரிய வரும். கால்களை மூடினால் தலை தெரிய வரும்.

அறிவிப்பளார் அறிவிக்கின்றார்: அவர்கள் இவ்வாறும் கூறியதாக நான் கருதுகிறேன். அதாவது அவர்கள் கூறினார்கள்: ஹம்ஸா ஷஹீதனார்கள். அவர்கள் என்னை விட சிறந்தவர்கள் ஆவார்கள். பிறகு அவர்கள் கூறினார்கள்: நமக்கு இவ்வுலகில் எவையெல்லாம் வழங்கப்பட்டுள்ளதோ அதைக் கண்டு நமது நன்மைகளின் பிரதிபலன் விரைவாகவே நமக்கு கிடைத்து விட்டதோ என்று நான் அஞ்சுகின்றேன். பிறகு அவர்கள் அழத் தொடங்கினார்கள். எதுவரை என்றால் உணவு கூட உண்ணவில்லை.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜனாயிஸ்... ஹதீஸ் எண் 1275)

மறுமையில் அல்லாஹ்வின் நடைமுறை எவ்வாறிருக்கும் என்ற அல்லாஹ்வின் மீதான அச்சம், பயம் அவர்களுக்கு முன்னால் வந்து விட்டது. எனவே அவர்கள் உணர்வுப்பூர்வமாக, அல்லாஹ் நமக்கு நற்கூலியை இவ்வுலகிலேயே அபிவிருத்தியாக தந்து விட்டானோ? அங்கு சென்று எதுவும் கிடைக்காதோ? என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் குப்பாப் பின் அர்த் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நாட்டை துறந்தோம். அல்லாஹ்வின் திருப்தியையே நாங்கள் விரும்பினோம். எங்களது கூலி அல்லாஹ்விடமே உள்ளது. எங்களில் சிலர் மரணித்து விட்டனர். அவர்கள் அதற்கு பிரதிபலனாக எதையும் பெறவில்லை. அவர்களில் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களும் ஆவார்கள். ஹஸ்ரத் முஸ்அப் அவர்கள் உஹது நாளன்று ஷஹீதானார்கள். எங்களிடம் ஒரேயொரு போர்வை மட்டுமே இருந்தது. அதைக் கொண்டு நாங்கள் அவர்களை கஃபன் செய்தோம். நாங்கள் அவரது தலையை மறைத்தபோது அவர்களது கால்கள் தெரிய வரும். அவர்களது கால்களை மறைக்க முற்பட்டால் அவர்களது தலை தெரிய வரும்.

எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இவர்களது தலையை மூடுங்கள். மேலும் இவர்களது கால்களில் புற்களைப் போடுங்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜனாயிஸ்... ஹதீஸ் எண் 1276)

திர்மிதியில் ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அலி பின் அபூ தாலிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு நபிக்கும் அல்லாஹ் 7 நண்பர்களை வழங்கியிருந்தான். அல்லது கண்காணிப்பாளர்களை வழங்கியிருந்தான். ஆனால் எனக்கு 14 நபர்கள் வழங்கப்பட்டுள்ளனர் என்று கூறினார்கள். அதற்கு நாங்கள் அவர்கள் யார்? என்று கேட்டோம். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், எனது இரண்டு பேரக் குழந்தைகள், ஜஃபர், ஹம்ஸா, அபூபக்ர், உமர், முஸ்அப் பின் உமைர், பிலால், சல்மான், மிக்தாத், அபூதர், அம்மார் மற்றும் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் ஆகியோர் ஆவர்.

(சுனன் திர்மிதி அப்வாபுல் மனாகிப் ஹதீஸ் எண் 3785)

ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவர்களது தந்தை கூறி வந்தார்கள். அதாவது ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் ஈமான் கொண்ட நாளிலிருந்து உஹது போரில் ஷஹீதான அந்த நாள் வரை அவர்கள் எனது நண்பராக இருந்தார்கள். அபிஸீனியாவிற்கு செய்யப்பட்ட இரண்டு ஹிஜ்ரத்திலும் அவர்கள் என்னுடன் பங்கு பெற்றார்கள். முஹாஜிரீன்களில் அவர் எனது நண்பர் ஆவார். நான் இவரைப் போன்ற ஒரு நபரைக் கண்டதில்லை.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 87 முஸ்அப் பின் உமைர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பெருமானார் (ஸல்) அவர்கள் உஹது போருக்குப் பிறகு திரும்பி வந்தபோது ஹஸ்ரத் முஸ்அப் அவர்களின் மனைவி ஹஸ்ரத் ஹம்னா பின்த் ஜஹ்ஷ் அன்னாரைச் சந்தித்தார்கள். அவர்களது சகோதரரான அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களின் ஷஹாதத் பற்றி மக்கள் அவர்களிடம் கூறினார்கள். அதற்கு அவர்கள் اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيۡهِ رٰجِعُوۡنَ என்று கூறியவாறு அவர்களின் பாவமன்னிப்பிற்காக துஆ செய்தார்கள்.

பிறகு அவர்களது மாமா ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களது ஷஹாதத் தொடர்பாக அவர்களிடம் கூறப்பட்டபோது அதற்கு அவர்கள் اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيۡهِ رٰجِعُوۡنَ என்று கூறினார்கள். மேலும் அவர்களின் பாவமன்னிப்பிற்காக துஆ செய்தார்கள். பிறகு அவர்களது கணவரான ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களின் ஷஹாதத் பற்றி மக்கள் கூறியபோது அவர்கள் அழுதார்கள். மேலும் நிம்மதியிழந்தார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்களிடம் அவர்களது கணவருக்கு ஒரு குறிப்பான அந்தஸ்தும் தகுதியும் இருக்கின்றது என்று கூறினார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா பக்கம் 396 கஸ்வா உஹது – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அதாவது ஹஸ்ரத் ஹம்னா பின்த் ஜஹ்ஷ் அவர்கள் தொடர்பாக வருகின்றது. அதாவது இவர்களிடம் அவர்களது சகோதரர் ஷஹீதானது பற்றி கூறப்பட்டபோது அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அவர் மீது

## திருக்குர்ஆனிலிருந்து...

நற்செய்தி உடையவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமன்றி நாம் தூதர்களை அனுப்புவதில்லை. ஆகவே, நம்பிக்கை கொண்டு (தம்மைச்) சீர்திருத்திக் கொள்கின்றவர்களுக்கு (வருங்காலத்தைப் பற்றி) எவ்விதப் பயமும் ஏற்படாது. அவர்கள் (சென்ற காலம் பற்றிக்) கவலைப்படவும் மாட்டார்கள். (6:49)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

கருணை காட்டுவானாக. மேலும் கூறினார்கள்:

اِنَّا لِلّٰہِ وَ اِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

பிறகு மக்கள், உமது கணவரும் ஷஹீதாக்கப்பட்டு விட்டார் என்று கூறியதும் அவர்கள், இது வருத்தத்திற்குரிய விஷயம் என்று கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்களுக்கு அவளது கணவருடன் எத்தகைய தொடர்பு இருக்கின்றதென்றால் அவ்வாறு வேறு எவருடனும் இருப்பதில்லை.

(சுனன் இப்னு மாஜா, கிதாபுல் ஜனாயிஸ்... ஹதீஸ் எண் 1590)

இந்த சம்பவத்தை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஒரு குத்பாவில் தனக்கே உரிய பாணியில் குறிப்பிட்டார்கள். அதில் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களின் ஷஹாதத் தொடர்பான சம்பவம் பற்றியும், அப்போது அவர்களது மனைவியின் உணர்வுகளையும் அன்னார் எடுத்துக் கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சஹாபாக்களில் எவர்களது உறவினர்களில் ஒருவரை விட அதிகமானோர் (ஷஹீதாக்கப்பட்டுள்ளார்களோ) அவர்களைப் பற்றி மெதுமெதுவாகத்தான் எடுத்துக் கூறப்படும். ஏனென்றால் இதனால் ஏற்படக்கூடிய கவலை உள்ளத்தில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக இவ்வாறு செய்து வந்தனர். எனவே அந்த நேரத்தில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் சகோதரி ஹம்னா பின்த் ஜஹ்ஷ் அவர்கள் வந்திருந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹம்னாவே! நீர் பொறுமையை மேற்கொள்வாயாக. மேலும் இறைவனிடம் நற்கூலிக்கான நம்பிக்கையை வைப்பாயாக என்று கூறினார்கள். எனவே அவர்கள், யா ரஸூலல்லாஹ்! யாருடைய நற்கூலிக்காக என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களது மாமாவான ஹம்ஸா அவர்களுக்காக என்று கூறினார்கள்.

அப்போது ஹம்னா அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். கஃபரலஹூ வரஹிமஹூ ஹனிய்யன் லஹூ ஷஹாதா

இதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹம்னாவே! நீர் பொறுமையை மேற்கொள்வாயாக. மேலும் இறைவனிடம் நற்கூலிக்கான நம்பிக்கையை வைப்பாயாக என்று கூறினார்கள். எனவே அவர்கள், யா ரஸூலல்லாஹ்! யாருடைய நற்கூலிக்காக என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களது சகோதரரான அப்துல்லாஹ் அவர்களுக்காக என்று கூறினார்கள்.

அப்போது ஹம்னா அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். கஃபரலஹூ வரஹிமஹூ ஹனிய்யன் லஹூ ஷஹாதா

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹம்னாவே! நீர் பொறுமையை மேற்கொள்வாயாக. மேலும் இறைவனிடம் நற்கூலிக்கான நம்பிக்கையை வைப்பாயாக என்று கூறினார்கள். எனவே அவர்கள், யா ரஸூலல்லாஹ்! யாருடைய நற்கூலிக்காக என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களது கணவரான முஸ்அப் பின் உமைர் அவர்களுக்காக என்று கூறினார்கள்.

அப்போது ஹம்னா அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இது வருத்தத்திற்குரிய விஷயமாகும்.

இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உண்மையில் கணவனின் மீது மனைவிக்கு மிகப்பெரிய உரிமை இருக்கின்றது. அதுபோன்று வேறு எவருக்கும் இல்லை. ஆனால் நீர் இத்தகைய வார்த்தையை ஏன் கூறினாய்? என்று அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! எனக்கு அவர்களது குழந்தைள் அனாதையாகி விட்டார்களே என்ற எண்ணம் வந்தது. எனவேதான் நான் கஷ்டத்திற்கு ஆளாகினேன். மேலும் இந்த நிலையில்தான் எனது வாயிலிருந்து இந்த சொற்கள் வெளிவந்து விட்டது என்று கூறினார்கள்.

எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்அப் (ரலி) அவர்களின் பிள்ளைகளுக்காக துஆ செய்தார்கள். அதாவது அல்லாஹ்வே! இவர்களை நீயே பரிபாலிப்பவனாக இருப்பாயாக. மேலும் இவர்கள் மீது பரிவும் கருணையும் காட்டுவாயாக. மேலும் இவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வாயாக.

(குத்பாத்தே தாஹிர் கப்ல் அஸ் கிலாஃபத் பக்கம் 363)

மேலும் அல்லாஹ்வும் இவர்களுடன் நல்ல முறையிலேயே நடந்து கொண்டான். பெருமானார் (ஸல்) அவர்களது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இத்துடன் ஹஸ்ரத் முஸ்அப் அவர்களைப் பற்றிய குறிப்பு முடிவு பெற்று விட்டது. அடுத்த சஹாபியைப் பற்றி அடுத்து எடுத்துக் கூறப்படும். இன்ஷா அல்லாஹ்.

இப்போது நான் இன்றைய நாட்களில் பரவியிருக்கின்ற கொரானா வைரஸ் தொடர்பாக உறுப்பினர்களுக்கு கவனமூட்ட விரும்புகின்றேன். அரசாங்கங்கள் சார்பாக செய்யப்படுகின்ற தற்காப்பு நடவடிக்கை தொடர்பான அறிவிப்பை நாம் அனைவரும் பின்பற்ற வேண்டும். ஆரம்பத்தில் சில ஹோமியோபதி மருந்துகளை தற்காப்பிற்காகவும், சிகிச்சைக்காகவும் நான் மருத்துவர்களிடம் ஆலோசனை செய்து கூறியிருந்தேன். அதை பயன்படுத்த வேண்டும்.

இது நாம் செய்கின்ற மேலோட்டமான சிகிச்சையாகும். இதனால் 100 சதவிகிதம் சிகிச்சை செய்யப்பட்டு விட்டது என்று நம்மால் கூற முடியாது. ஆனால் எந்த அளவு சிகிச்சை மேற்கொள்ள முடியுமோ அந்த நோய்க்கேற்ப இந்த மருந்துகள் பரிந்துரைக்கப்பட்டன. அல்லாஹ் இதில் ஷிஃபாவையும் வைப்பானாக. எனவே இதனை நாம் பயன்படுத்த வேண்டும். ஆனால் இதுமட்டுமல்லாமல் அறிவிப்பு செய்யப்படுவதைப் போன்று தற்காப்பு நடவடிக்கையும் அவசியமாகும்.

இது தொடர்பாக இதுவும் அவசியமாகும். அதாவது கூட்டம் நிறைந்த பகுதிக்கு செல்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். பள்ளிவாசலுக்கு வருகை தருபவர்களும் இதனை கருத்தில் கொள்ள வேண்டும். சிறிதளவு காய்ச்சல் இருந்தாலும் அல்லது இருமல் இருந்தாலும் பிறகு பள்ளிவாசலுக்கு வரக்கூடாது. பள்ளிவாசலுக்கென்று சில உரிமைகள் இருக்கின்றன. பள்ளிவாசலுக்கு மற்றவர்களை பாதிப்பிற்கு ஆளாக்கும் எந்தவொரு நபரும் வரக்கூடாது. பரவக்கூடிய எந்தவொரு நோயானாலும் அந்த நோயாளி பள்ளிக்கு வருவதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் (அவர்களிடம்) கூறுவீராக: அல்லாஹ்வையன்றி நீங்கள் அழைப்பவை(களான பொய்யான தெய்வங்)களை நான் வணங்கக் கூடாதென்று (முற்றிலும்) தடுக்கப்பட்டுள்ளேன். (6:57)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

குறிப்பாக இன்றைய நாட்களில் தும்மல் வரும்போது வாயில் கையை வைக்க வேண்டும். அல்லது கைக்குட்டையை வைக்க வேண்டும். சில தொழுகையாளிகளும் முறையிடுகின்றனர். அதாவது சிலர் எங்களுடன் நின்று கொண்டு இருமுகின்றனர். அவர்கள் வாயிக்கு முன்னால் கைகளை வைப்பதில்லை. மேலும் கைக்குட்டையையும் வைப்பதில்லை. மேலும் எந்த அளவுக்கு சப்தமாக இரும்புகின்றனர் என்றால் அதன் துளி எங்கள் மீதும் படுகின்றது. எனவே அருகில் தொழுகின்ற தொழுகையாளிக்கும் உரிமை இருக்கின்றது. எனவே ஒவ்வொருவரும் இதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

நான் கூறியதுபோன்று இன்றைய நாட்களில் குறிப்பாக இதைப் பேண வேண்டும். இன்றைய நாட்களில் மருத்துவர்கள் கூறக்கூடிய தற்காப்பு நடவடிக்கை என்னவென்றால், கைகளையும், முகத்தையும் தூய்மையாக வைத்திருங்கள் என்பதாகும். கை அசுத்தமாக இருக்குமென்றால் பிறகு முகத்தில் கையை வைக்காதீர்கள். பிறகு கைகளில் செனிடாயிஸரை தடவுங்கள் என்று கூறுகின்றனர்.

ஆனால் முஸ்லிம்கள் ஐந்து நேரத் தொழுகையாளியாக இருப்பாரோயானால் மேலும் ஐந்து நேரம் வுளூவும் செய்வாரோயனால், தண்ணீரின் மூலமாக மூக்கை சுத்தப்படுத்துவாரேயானால், மேலும் சரியான முறையில் வுளூ செய்யப்படுமேயானால் இந்த தூய்மை மிகவும் உயர் தரமான ஒன்றாகும். இது செனிடாயிஸரின் குறையை பூர்த்தி செய்கின்றது.

இன்றைய நாட்களில் மார்கெட்டிலிருந்து செனிடாயிஸர் காணாமல் போய்விட்டது என்றே கேள்விப்படுகிறேன். மக்கள் அனைவரும் அதை வாங்கி விட்டனர். கடைகளின் செல்ஃப் காலியாக உள்ளது. எவ்வாறிருப்பினும் வுளூ சரியான முறையில் செய்யப்பட்டால் பிறகு அதுவே வெளிப்படையான தூய்மையாகவும் இருக்கும். மேலும் எவர் வுளூ செய்வாரோ மேலும் தொழவும் செய்வாரோ பிறகு அது ஒரு ஆன்மீக தூய்மைக்கான வழியாக அமைந்து விடும். பிறகு இன்றைய நாட்களில் குறிப்பாக துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். எனவே இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

பள்ளிவாசலின் உரிமைகள் தொடர்பாக நான் எடுத்துக் கூறியிருந்தேன். இதனையும் கூறி விடுகின்றேன். அதாவது குறிப்பாக குளிர் காலத்திலும், பொதுவாகவும் பள்ளிவாசலுக்கு வரக்கூடியவர்கள் அணிந்து வருகின்ற ஸாக்ஸை தினமும் மாற்ற வேண்டும். மேலும் அதனை துவைக்க வேண்டும். ஸாக்ஸ் காரணமாக கால்களின் வழியாக துர்நாற்றம் ஏற்படுகிறது. பிறகு அது அருகில் நின்று தொழுகின்றவருக்கும் கஷ்டத்தை தரக்கூடியதாக அமைந்து விடுகிறது. வரிசையில் பின்னால் நின்று சஜ்தா செய்யக் கூடியவருக்கும் அது கஷ்டத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. இது தொடர்பாக நாம் பேணி நடக்க வேண்டும்.

கட்டளை என்னவென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: துர்நாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வெங்காயம் போன்றவற்றை சாப்பிட்டு விட்டு பள்ளிவாசலுக்கு வரக்கூடாது.

(சுனன் அபூ தாவூது... ஹதீஸ் எண் 3823)

சில நேரங்களில் ஏப்பம் போன்றவை வருகின்றது. அல்லது எத்தகைய துர்நாற்றம் வாயிலிருந்து வருகின்றது என்றால் அதனால் மற்ற தொழுகையாளிகளின் உடல்நடத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. மேலும் இவ்வாறு தொழுகையாளிகளுக்கும் பள்ளிவாசலுக்கு வருபவர்களுக்கும் இது கஷ்டத்தை ஏற்படுத்தித் தரக்கூடிய நிலைமையாக ஆகி விடுகிறது.

எனவேதான் பள்ளிவாசலுக்கு வரும்போது நறுமணத்தை பூசி விட்டு வாருங்கள் என்ற கட்டளை உள்ளது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜுமுஆ.... ஹதீஸ் எண் 883)

எந்த அளவுக்கு என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சமைக்கப்படாத மாமிசத்தைக் கூட பள்ளிவாசலுக்கு உட்புறமாக எடுத்துக் கொண்டு செல்லாதீர்கள்.

(சுனன் இப்னு மாஜா, கிதாபுல் மஸாஜித்... ஹதீஸ் எண் 748)

அங்கு மனிதர்கள் அமர்ந்திருக்கலாம். ஆக இதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். ஆனால் இந்த சாக்குப் போக்கைக் கூறி பள்ளிவாசலுக்கு வருவதையே விட்டு விட வேண்டும் என்பது இதன் பொருளல்ல. தமது வெளிப்படையான நிலைமையைக் கண்டு தனது உள்ளத்தில் மார்க்கத் தீர்ப்பு கேட்க வேண்டும். மேலும் எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் உள்ளத்தின் நிலையை அறிந்தவனாக இருக்கின்றான். எனவே ஒருவர் நோயுற்றிருந்தாலும் அவர் மருத்துவரிடம் இது எவ்வாறான நோய் என்பது பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் ஒன்று இரண்டு நாட்கள் தவிர்ந்து இருப்பது சிறந்ததாகும்.

மேலும் இன்றைய நாட்களில் முலாகாத் செய்வதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுமாறு கூறப்படுகிறது. இதுவும் மிக முக்கியமாகும். எவரது கை எப்படி இருக்கும் என்பது எவருக்கும் தெரியாது. கை குலுக்குவதால் தொடர்பும் அன்பும் அதிகரிக்கத்தான் செய்கின்றது. ஆனால் இந்த நோயின் காரணமாக தவிர்ப்பது நல்லதாகும்.

இப்போது உலகவாதிகளும் கூட பெண்களை ஆண்களுடன் சந்திக்கச் செய்வதில்லை என்று முன்பு கூச்சலிட்டு வந்தனர். ஆனால் தற்போது ஜெர்மனியின் ஒரு சான்சலருடன் அவரது மேலதிகாரி கை குலுக்க மறுத்து விட்டார். இங்குள்ள நாடாளுமன்றத்திலும் ஒரு உறுப்பினர் கூறினார். நாங்கள் செய்கின்ற இந்த முஸாஃபாவினால் கொரானா வைரஸின் காரணமாக தப்பித்து விடுகின்றோம். ஏனென்றால் எங்களிடம் கை குலுக்கும் நடைமுறையே கிடையாது. நாங்கள் சல்யூட் தான் செய்கின்றோம். இந்த நடைமுறைதான் இன்று இருக்கின்றது. அவர் இவ்வாறும் கூறுகின்றார். அதாவது பெண்களுடன் நாங்கள் கை குலுக்குகின்றோம். மாறாக அவர்களை கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்க முயற்சி செய்கின்றோம். ஆனால் பெண்களுக்கு அது பிடித்திருக்கின்றதா? இல்லையா? என்பது எங்களுக்குத் தெரியாது. நாங்கள் வலுக்கட்டாயமாக இந்த செயலை செய்கின்றோம்.

இந்த மக்கள் அல்லாஹ்வின் கூற்றை கேட்க தயாராக இருக்கவில்லை. ஆனால் இந்த நோயானது இவர்களை இதன் பக்கம் கவனமூட்டக்கூடியதாக ஆக்கி விட்டது. இறைவன் புறமிருந்தும் இவர்களுக்கு கவனமூட்டச் செய்வதற்கான ஏற்பாட்டை இறைவன் செய்வானாக. அல்லாஹ்வின் கட்டளைகள் மீது இவர்களுக்கு கருத்து வேறுபாடு இருந்தது. நாம் இவர்களிடம்

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் தொழுகைகளைச் (சரியாக) நிறைவேற்றுங்கள். அவனுக்கே அஞ்சுங்கள். அவனிடமே நீங்கள் ஒன்று சேர்க்கப்படுவீர்கள் என்றும் (கட்டளையிடப்பட்டுள்ளது). (6:73)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

அன்புடன் ஆண்கள் பெண்களுடன் இவ்வாறு கை குலுக்குவதில்லை. அவ்வாறு செய்வது தடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறியபோது இவர்கள் கூச்சலிட்டனர். ஆனால் இப்போது பெரும்பான்மையினர் செவியுற்றுள்ளனர். அதாவது பல்வேறு இடங்களில் இந்த மக்கள் கை குலுக்குவதை மறுத்து விட்டனர். எனவே நாம்தான் இவர்களிடம் மிகவும் அன்பான முறையில் மென்மையுடன் இது எங்களது போதனையாகும் என்று கூறி வந்தோம்.

எவ்வாறிருப்பினும் இந்த நோயானது இந்த அடிப்படையில் இவர்களை ஓரளவிற்கு சீர்திருத்தம் செய்து விட்டது. நான் கூறியது போன்று இந்த சீர்திருத்தம் இவர்களை அல்லாஹ்வின் பக்கம் கொண்டு செல்லக் கூடியதாக இருக்கட்டுமாக. இந்த நோய் எதுவரை பரவும் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். மேலும் அல்லாஹ்வின் நியதி என்ன? என்பதையும் அவனே அறிவான். ஆனால் இது இறைவனது கோபத்தின் விளைவாக வெளிப்பட்டுள்ளதென்றால் இந்த காலத்தில் நாம் பார்க்கின்றோம். பல்வேறு வகையான நோய்கள், பூகம்பங்கள், பேரழிவுகள் ஆகியவை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகைக்குப் பிறகு அதிகமாகி விட்டது.

அல்லாஹ்வின் நியதியின் தீய விளைவுகளிலிருந்து நாம் தப்பிக்க வேண்டுமென்றால் அல்லாஹ்வின் பக்கம் குனிவது மிகவும் அவசியமாகும். ஒவ்வொரு அஹ்மதியும் இந்த நாட்களில் குறிப்பாக துஆவின் பக்கம் அழுத்தம் கொடுக்க வேண்டும். மேலும் தனது ஆன்மீக நிலையையும் சரி செய்வதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் உலகத்திற்காகவும் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கும் நேர்வழியை காட்டுவானாக. உலகவாதிகள் உலகத்தில் அதிகமாக மூழ்குவதற்கும், இறைவனை மறப்பதற்கும் பகரமாக தன்னைப் படைத்த இறைவனை அடையாளங்கண்டு கொள்ளக் கூடியவர்களாக இவர்கள் திகழ வேண்டும்.

இப்போது நான் சில ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா அகீல் அஹ்மது பட் சாஹிப் அவர்களின் மகனான தன்ஸீல் அஹ்மது பட் அவர்களுடையதாகும். இவன் 11 வயதுடைய சிறியவனாவான். 27 பிப்ரவரி 2020 அன்று இவனது மரணம் நிகழ்ந்தது. இவனது வஃபாத் எனது பார்வையில் ஷஹாதத் ஆகும். இந்த சம்பவம் இவ்வாறு நிகழ்ந்துள்ளது. அதாவது தில்லி கெஸ்ட் ஹவுஸ் லாஹூரிலுள்ள ஷாஹிரா காலணியில் அவனது வீட்டிற்கு அருகில் வசித்து வந்த பெண்மணி பிப்ரவரி 27 அன்று மிகவும் கொடூரமான முறையில் கொலை செய்து விட்டார். اِنَّا لِلّٰہِ وَ اِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

பாகிஸ்தானில் மவ்லவிகளின் மார்க்கத் தீர்ப்பின் விளைவாக அஹ்மதிகளை எந்த சாக்குப் போக்கையும் கூறி கொலை செய்வது மிகவும் எளிதான காரியமாக இருக்கின்றது. இந்த கொலையும் இதன் விளைவாகத்தான் ஏற்பட்டுள்ளது. நான் இந்த அன்பிற்குரியவனை ஷஹீதுகளில் இணைக்கின்றேன். எந்த காரணம் இருந்தாலும் அஹ்மதிய்யத்தும் ஒரு காரணம் தான். அவன் ஒன்றும் அறியாதவனாக இருந்தான். இப்போது வரை வந்துள்ள அறிக்கையின்படி அவன்மீது எந்த தப்பும் கிடையாது.

இந்த சம்பவம் தொடர்பாக தன்ஸீர் அஹ்மது பட் அவர்களின் தாயாரின் கூற்றுப்படி, பிப்ரவரி 27 அன்று பக்கத்து வீட்டில் அவனது இளைய சகோதரி விளையாட்டுப் பொருட்களை வைத்து விட்டு வந்து விட்டாள். அதை எடுத்து வருவதற்காக அனுப்பியிருந்தார்கள். அந்த வீட்டிற்கு இருவரும் வந்து செல்வது வழக்கமாக இருந்தது. என்ன நடந்தது என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். நீண்ட நேரம் காத்திருந்தும் சிறுவன் திரும்பி வராததினால் அவனது தாயார் பக்கத்து வீட்டிற்குச் சென்று கதவை தட்டியபோது அவர்கள் கதவை திறக்கவில்லை. நீண்ட நேரத்திற்குப் பிறகு கதவு திறக்கப்பட்டபோது சிறுவன் தொடர்பாக கேட்டறிந்தபோது, அவன் விளையாட்டுப் பொருட்களை இங்கிருந்து எடுத்துக் கொண்டு சென்று விட்டான் என்று கூறப்பட்டது.

எனவே அச்சிறுவனின் தாயார் தனது கணவரான அகீல் சாஹிப் அவர்களுக்கு தகவல் கொடுத்தார்கள். அவர்கள் உடனடியாக ஜமாஅத் ஏற்பாட்டாளர்களுடன் இணைந்து சிறுவனை தேட ஆரம்பித்தனர். காவல் நிலையத்திற்கும் தகவல் கொடுக்கப்பட்டது. பிறகு தெருவில் இருந்த சிசிடிவி கேமராவை ஆய்வு செய்தபோது அந்த சிறுவன் பக்கத்து வீட்டிற்குள் செல்கின்றான். ஆனால் அவன் வெளியே வரவில்லை. எனவே போலீஸின் உதவியுடன் வீட்டை ஆய்வு செய்தனர். இறுதியில் ஒரு பெட்டியில் சிறுவனின் உடல் கிடைத்தது.

போலீஸ் தரப்பிலிருந்து கூறப்படுவது என்னவென்றால், கொலை செய்த அந்த பெண்ணின் கணவர் எனது மனைவி சிறுவனைக் கொன்று பெட்டியில் உடலை மறைத்து வைத்திருக்கின்றாள் என்று முன்னரே தெரிவித்து விட்டார். அந்த பெண்ணும் வீட்டின் உரிமையாளரின் மகனும் இணைந்து அந்த சிறுவனை கொலை செய்துள்ளனர். இவ்விஷயத்தை அவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

தன்ஸீல் அஹ்மது பட் 20 நவம்பர் 2009 அன்று பிறந்தான். வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்திருக்கின்றான். அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் அமைப்பில் செயல் துடிப்புள்ள சிறுவனாக இருந்தான். ஜமாஅத் நிகழ்சிகளில் தொடர்ச்சியாக பங்கு பெற்று வந்தான். தனது வகுப்பில் புத்திக் கூர்மை பெற்ற மாணவனாக இருந்தான். நான்காம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். அவனது மரணத்திற்குப் பிறகு ரிஸல்ட் வந்தது. 750 ற்கு 729 மதிப்பெண் பெற்று வகுப்பில் முதலாவது இடத்தைப் பெற்றான்.

சிறுவனின் தாயார் கூறுகின்றார்கள்: தன்ஸீல் எனது மகன்களிலேயே எனக்கு மிகவும் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய மகனாக இருந்தான். எந்த பணியாக இருந்தாலும் முதலில் என்னிடம் அனுமதி பெற்ற பிறகே அதை செய்வான். அக்கம் பக்கத்திலுள்ளவர்களும், பொறுப்பாளர்களும் அவனிடம் எந்த பணியை செய்யும்படி கூறினாலும் உடனடியாக அந்த பணியை செய்வான். ஒருபோதும் மறுக்க மாட்டான்.

கொலை செய்த பக்கத்து வீட்டுக்காரர்களும் கூட சில சமயங்களில் அவனிடம் பணி வாங்கியுள்ளனர். அந்த பெண்ணிற்கும் இவன் கட்டுப்பட்டு நடந்து வந்தான். அவளது பணியை செய்து கொடுத்து வந்தான். பள்ளிக்கூடத்தின் ஆசிரியர்கள் மற்றும் ஜமாஅத்தின் பொறுப்பாளர்கள் இவனால் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். எப்போதும் புகழ்ந்து கூர்வார்கள். எம்டியே நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக பார்க்கக் கூடியவனாக இருந்தான்.

குறிப்பாக குழந்தைகள் தொடர்பான நிகழ்ச்சியையும், குத்பாவையும் கேட்டு வந்தான். பள்ளிவாசலுக்கு வந்து தொழுகையை பேணும் பழக்கம் இருந்தது. அவனது தந்தை பணியிலிருந்து திரும்பி வரும்போதும், பள்ளிவாசலுக்கு செல்வதற்காக சிறிதளவு சோம்பேறித்தனத்தை வெளிப்படுத்தும்போதும் இந்த சிறுவன் அவர்களை வலுக்கட்டாயமாக பள்ளிவாசலுக்கு அழைத்துச் செல்வான்.

மர்ஹூம் தனக்குப் பின்னால் தனது தந்தையான அகீல் அஹ்மது பட் அவர்களையும், தாயாரான நாயிலா அகீல் அவர்களையும், இரண்டு சகோதரர்களையும், இரண்டு

சகோதரிகளையும் விட்டுச் சென்றுள்ளான். அல்லாஹ் இவனை தனது அன்பின் போர்வையில் எடுத்துக் கொள்வானாக. மேலும் கொலை செய்தவர்களுக்கு அவர்களின் முடிவை வழங்குவானாக. மேலும் பெற்றோர்களுக்கு பொறுமையையும், நிம்மதியையும் வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா டாக்டர் முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் அவர்களின் மகனான ராவல்பிண்டி மாவட்டத்தின் முன்னால் அமீர் பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். 16 பிப்ரவரி அன்று தனது 87 வது வயதில் ராவல்பிண்டியில் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَ اِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

மர்ஹூம் மூஸி ஆவார்கள். அவர்களது குடும்பத்தில் மனைவி மட்டுமின்றி இரண்டு மகன்களும், மூன்று மகள்களும் இருக்கின்றனர். 1931 ஆம் ஆண்டு குஜ்ராத் மாவட்டத்தில் மிகவும் கலப்பற்ற ஓர் அஹ்மதி குடும்பத்தில் அன்னார் பிறந்தார்கள். அவர்களது தந்தை டாக்டர் முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் அவர்கள் பைஅத் செய்து அஹ்மத்திய்யா ஜமாஅத்தில் இணைந்தார்கள். பஷீர் சாஹிப் அவர்கள் ஆரம்ப கல்வியை காதியானில் பயின்றார்கள். 1947 ல் மெட்ரிக் தேர்ச்சி பெற்றார்கள். 1952 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் மிலிட்ரி அகாடமிக்கு Six Long Course லில் இணைந்தார்கள். 1982 ல் பணி ஓய்வு பெற்றார்கள். ஒரு நீண்ட காலமாக இஸ்லாமாபாதில் பாலிஸி இன்ஸ்டிடியூட்டில் தலைவராக நாட்டிற்கு தொண்டாற்றும் பாக்கியத்தை பெற்றார்கள். இவ்வாறு 66 ஆண்டுகள் நாட்டிற்கு இவர்கள் தொண்டாற்றியுள்ளார்கள்.

ஜமாஅத்திற்கு அவர்கள் ஆற்றிய தொண்டைப் பொறுத்தவரை 2012 ஆம் ஆண்டு ராவல்பிண்டி ஜமாஅத்தின் அமீராக நான் இவர்களை நியமித்தேன். 9 பிப்ரவரி 2020 வரை ராவல்பிண்டி ஜமாஅத்தின் அமீராகவும் மாவட்ட அமீராகவும் தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்தது. 1979 ல் ராவல்பிண்டிக்கு இவர்களது பணிமாற்றம் நடைபெற்றது. 16 ஆண்டுகள் வரை நாயிப் அமீராகவும், செகரட்டரி தஃலீமாகவும் ராவல்பிண்டி ஜமாஅத்திலும் மற்றும் மாவட்டத்திலும் தொண்டாற்றும் நற்பாக்கியத்தைப் பெற்றார்கள். ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனனின் டைரக்டராகவும், மஜ்லிஸே ஷூராவின் பல்வேறு கமிட்டிகளுக்கு உறுப்பினராகவும் இருநதுள்ளார்கள். மர்ஹூம் கலப்பற்ற நபர் ஆவார்.

கலப்பற்ற முறையில் மார்க்கத் தொண்டாற்றி வந்தார். சந்திக்கக்கூடிய ஒவ்வொருவரிடமும் புன்சிரிப்புடன் சந்திப்பார். கருணை காட்டக்கூடியவர். பொதுத் தொண்டு செய்யக் கூடியவர். தேவையுடையவர்களின் பணியை செய்து கொடுப்பார்கள். மார்க்கத் தொண்டைப் பொறுத்தவரை சட்ட திட்டத்தை முறையாக பேணக் கூடியவர். தாமும் தொண்டாற்றுவது மட்டுமல்லாமல், தனது பணியாளர்களான நண்பர்களையும் தொண்டாற்றுமாறு கவனமூட்டுவார்கள். மார்க்க பணிகளில் சோம்பேறித்தனத்தை ஒருபோதும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்.

தமது செயற்குழுவின் உறுப்பினர்களுக்கு அவர்களின் பணியை அவர்களிடம் ஒப்படைக்கும்போது அவர்களையும் ஃபாலோஅப் செய்வார்கள். அதிகமாக துஆ செய்யும் பழக்கம் கொண்டவர். இறை வணக்கம் செய்யக் கூடியவர். மேலும் கிலாஃபத்துடன் அன்பு செலுத்தக்கூடிய கலப்பற்ற நபர் ஆவார். இறுதி வயது வரை அன்னாரது நினைவுத் திறன் நன்றாகவே இருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நேசிக்கக் கூடியவராக இருந்தார்கள். நான் அஹ்மதியாக இருக்கின்றேன் என்பற்காக எப்போதும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தி வந்தார்கள். திருக்குர்ஆன், நபிமொழி மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை எப்போதும் படித்து வருவது அவர்களது நடைமுறையாக இருந்துள்ளது. ஏழைகள், தேவையுடையவர்கள் ஆகியோருக்கு எவருக்கும் தெரியாமல் பொருளாதார உதவிகளை செய்து வந்தார்கள். குறிப்பாக விதவைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதில் அதிகமாக கவலை கொண்டிருந்தார்கள். மேலும் எப்போதும் அவர்களுக்கு உதவி செய்வதற்காக ஆயத்தமாக இருந்தார்கள். பல நபர்களும், குடும்பமும் இவர்களது நிரந்தர பொருளாதார உதவியின் மூலமாக பயனடைந்து வந்தது.

எந்த அளவுக்கு வழங்கக் கூடியவர் என்றால் ஒரு நபர் எழுதியுள்ளார். அதாவது அவரது கடை எரிந்து விட்டது. இழப்பு ஏற்பட்டபோது யாருக்கும் தெரியாமல் அன்னார் ஒரு பெரும் தொகையை வழங்கியவாறு இதைப் பற்றி எவரிடமும் எதுவும் கூறக்கூடாது என்றும் கூறினார்கள். எனவே அவர் வீட்டிற்குச் சென்று பையை திறந்து பார்த்தபோது இரண்டு லட்சம் ரூபாய் இருந்தது. வியாபாரம் சரியான பிறகு அந்த பணத்தை திருப்பிக் கொடுக்க முயற்சி செய்தபோது, நான் திரும்பப் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் கொடுக்கவில்லை என்று கூறினார்கள்.

ராவல்பிண்டி மாவட்டத்தின் முபல்லிக் தாஹிர் மஸ்மூத் சாஹிப் எழுதுகின்றார்கள்: அமீர் சாஹிப் அவர்கள் மிகவும் மென்மையான இயல்பைக் கொண்டவர். கருணை உள்ளம் கொண்டவர். அதிகமாக துஆ செய்யும் மனிதர் ஆவார். ஜுமுஆ நாளன்று அவ்வானே தவ்ஹீதிற்கு முதலிலேயே வருவார்கள். மிகவும் பணிவுடன் நவாஃபில் தொழுவார்கள். வேகமாக தொழக் கூடியவர்களுக்கு காதியானைச் சார்ந்த சஹாபாக்கள் மற்றும் சான்றோர்களின் சம்பவங்களை எடுத்துக் கூறுவார்கள். அங்கிருந்துதான் அவர்களுக்கு தர்பிய்யத் கிடைத்தது. மெது மெதுவாக தொழக் கூடியவர்களிடம் தமது மகிழ்ச்சியை தெரிவிப்பார்கள். துஆக்கள் மற்றும் தஸ்பீஹாத் செய்வதன் பக்கம் கவனமூட்டுவார்கள். தாமும் துஆ செய்யக்கூடியவராக இருந்தார்கள். மேலும் மக்களுக்கு தொழுகையின் பக்கம் கவனமூட்டக் கூடியவராகவும் இருந்தார்கள்.

ஒவ்வொருவரும் இதனை எழுதியுள்ளனர். அதாவது அன்னார் தேவையுடையவர்களுக்கு உதவி செய்யக்கூடியவராக இருந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை நேசித்து வந்தார்கள். அந்த நூல்களிலுள்ளவற்றை மீட்டிங்கில் எடுத்துக் கூறுவார்கள்.

ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனின் டைரக்டராகவும் இருந்தார்கள். அவர்களது செகரட்டரி நாஸிர் ஷம்ஸ் சாஹிப் எழுதுகின்றார்கள்: அன்னார் 2011 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து 2019 இறுதி வரை ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனின் டைரக்டராக இருந்தார்கள். உடலில் பலவீனம் இருந்த போதிலும் அனைத்து மீட்டிங்கிலும் தொடர்ந்து கலந்து கொள்வார்கள். அன்னாரது துஆ மற்றும் அன்னாரது அன்னாரது ஆலோசனைகளிலிருந்து எங்களுக்கு ஒரு பெரும் அளவுக்கு வழிகாட்டல் கிடைத்து விடும். மர்ஹூம் கலப்பற்ற, இறையச்சமுடைய, கிலாஃபத்தின் மீது உண்மையான பற்றுணர்வு கொண்ட, மார்க்கத்திற்கு தொண்டாற்றக்கூடிய நபர் ஆவார்கள்.

அவர்களது ஒரு குறிப்பான சிறப்பம்சம் என்னவென்றால், நானும் அதனை கண்டுள்ளேள். அதாவது இறை தொடர்பு மற்றும் மிகவும் உருக்கத்துடனும், பயபக்தியுடனும் தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்புடனும்,

கருணையுடனும் நடந்து கொள்வானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக. அவர்களது பிள்ளைகளுக்கும் அன்னாரது நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

மூன்றாவது ஜனாஸா பைஸிலாபாதைச் சேர்ந்த டாக்டர் ஹமீதுத்தீன் சாஹிப் அவர்களுடையதாகும். 29 பிப்ரவரி 2020 அன்று வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَ اِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

மர்ஹூமின் குடும்பத்தில் அன்னாரது தந்தையான மதிப்பிற்குரிய முஹம்மது தீன் சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய ஃபதஹுத்தீன் சாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. இவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்து பைஅத் செய்தனர். இவர்கள் இருவரும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது கரங்களில் பைஅத் செய்தார்கள். மர்ஹூம் காதியானில் பிறந்தார்கள். இவர்களது தாயாரின் சச்சா ஹஸ்ரத் மவ்லானா முஹம்மது இப்ராஹீம் சாஹிப் காதியானி அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள்.

மிகச்சிறந்த ஆலிம் ஆவார்கள். ஒரு நீண்ட காலம் மத்ரஸா அஹ்மதிய்யா காதியானில் ஆசிரியராக இருந்துள்ளார்கள். இந்தியா பிரிவினைக்குப் பிறகு மர்ஹூமின் குடும்பம் பைஸிலாபாதிற்கு குடிபெயர்ந்தது. டிஸ்பென்ஸர் தொழிலை செய்து வந்தார்கள். இதன் மூலமாக முழு பகுதியிலும் மனிதத் தொண்டாற்றுவதற்கான நற்பாக்கியம் இவர்களுக்கு கிடைத்தது.

தேவையுடையவர்களுக்கு இலவசமாக சிகிச்சை வழங்கி வந்தார்கள். எளிமையான நபராவார். இறையச்சமுடையவர். தொழுகையை பேணி நடப்பவர். புனித இடத்தை கண்ணியப்படுத்துபவர். கிலாஃபத்தை நேசிக்கக் கூடியவர். மிகவும் பரிவுகாட்டக் கூடியவர். அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை வைத்திருப்பவர். நம்பிக்கையான மனிதர் ஆவார். எந்தவொரு விஷயத்திலும் எவருக்கும் மறுப்பு தெரிவித்தது கிடையாது. நன்மையை வேண்டக் கூடிய, அனைவருக்கும் உதவி செய்வதற்கு முயற்சி செய்யக்கூடிய நபராவார். ஜமாஅத்தின் பல்வேறு பொறுப்புகளில் தொண்டாற்றும் நற்பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றார்கள்.

இவர்களது ஒரு மகன் கரீமுத்தீன் ஷம்ஸ் சாஹிப் முரப்பி ஆவார். இன்றைய நாட்களில் தன்ஸானிய்யாவில் தொண்டாற்றி வருகின்றார். மைதானத்தில் பணி செய்வது வருவதால் இவர்களது ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அன்னாரது மருமகனும் முரப்பி ஆவார். இன்னொரு மருமகன் முஅல்லிம் ஆவார். ஒரு பேரன் ரப்வாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் நான்காவது வருடம் படித்துக் கொண்டிருக்கின்றார். இதேபோன்று பல பேரக் குழந்தைகள் வக்ஃபே நவ் என்ற அருளுக்குரிய திட்டத்தில் பங்கு பெற்றுள்ளனர்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்புடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக. அவர்களது அந்தஸ்தை உயர்த்துவானாக. அவர்களது சந்ததிகளிலும் பற்றுணர்வுடன் தனது பைஅத்தின் உரிமைகளை செலுத்துவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

நான் கூறியதுபோன்று தொழுகைகளுக்குப் பிறகு இவர்களது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளில் நிலைத்திருப்பதற்குரிய நற்பாக்கியத்தை உங்களுக்கு வழங்குவானாக. மேலும் மாநாட்டின் எண்ணற்ற அருட்களின் மூலம் அருள்பாலிப்பானாக. மேலும் இந்த அனைத்து நிகழ்ச்சிகளிலிருந்தும் முழுமையான முறையில் பயன் பெறுவதற்கான நற்பாக்கியத்தை உங்களுக்கு வழங்குவானாக. பைஅத்தின் உரிமைகளை செலுத்துவதற்குரிய நற்பாக்கியத்தை அல்லாஹ் உங்களுக்கு வழங்குவானாக.

நீங்கள் எப்போதும் அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டு நடப்பர்வகளாக திகழ வேண்டும். அல்லாஹ் உங்களது வாழ்நாளில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துவானாக. அது நன்மையிலும், இறையச்சத்திலும், இஸ்லாத்திற்காகவும், மனித இனத்திற்கு தொண்டாற்றுவதிலும் உங்களை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும். அல்லாஹ் உங்கள் அனைவரின் மீதும் தனது அருளைப் பொழிவானாக.

வஸ்ஸலாம்

எளியவன்

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(நன்றி:அல் ஃபஸல் இன்டர்நேஷனல் பத்திரிகை 15 அக்டோபர் 2019)

### பெற்றோர்களின் கவனத்திற்கு

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) கூறுகின்றார்கள்:

பெற்றோர்களுக்கும் ஒன்றை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்... அவர்கள் தமது தொழுகைகளின் நிலைகளை முன்மாதிரியாக ஆக்க வேண்டும். திருக்குர்ஆனை ஓதுவதிலும் கற்பிப்பதிலும் தமது முன்னுதாரணத்தை வெளிப்படுத்த வேண்டும். உயர் நல்லொழுக்கத்தில் முன்னுதாராணமாக திகழ வேண்டும். மார்க்க அறிவை கற்பதில் தாமும் கவனம் செலுத்த வேண்டும். பொய்யின் மீதான வெறுப்புணர்வில் உயர் தரமான முன்மாதிரியை வெளிப்படுத்த வேண்டும். சில பொறுப்பாளர்கள் மூலம் சில துன்பங்கள் தமக்கு ஏற்பட்டிருந்தாலும் வீட்டில் ஜமாஅத் அமைப்பிற்கு எதிராகவும் பொறுப்பாளர்களுக்கு எதிராகவும் பேசுவதிலிருந்து விலகியிருக்க வேண்டும். M.T.A –வில் குறைந்தபட்சம் எனது குத்பாவையாவது தொடர்ந்து பெற்றோர்கள் கேட்க வேண்டும். இவ்விஷயங்கள் வெறும் வக்ஃபே நவ் பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு மட்டும் உரியதல்ல.

மாறாக, எந்த அஹ்மதி தனது எதிர்கால சந்ததிகள் ஜமாஅத் அமைப்புடன் தொடர்பு கொண்டவர்களாக இருக்க வேண்டும் என விரும்புகின்றாரோ அப்படிப்பட்ட ஒவ்வோர் அஹ்மதியும் தனது குடும்பத்தை அஹ்மதி குடும்பமாக மாற்ற வேண்டும். உலகவாதிகளின் குடும்பமாக உங்கள் வீட்டை ஆக்கிக் கொள்ளக் கூடாது. இல்லையென்றால் எதிர்கால சந்ததிகள் உலகில் வீழ்ந்து அஹ்மதிய்யத்தில் இருந்து மட்டுமல்ல. இறைவனிடமிருந்தும் விலகிச் சென்று விடுவர். மேலும் அதன் மூலம் தனது இம்மை மறுமை இரண்டையும் நாசமாக்கிக் கொள்வர்.

(குத்பா ஜுமுஆ 28.10.2016)

### திருக்குர்ஆனிலிருந்து...

அவனிடமே மறைவானவற்றிற்குரிய திறவுகோல்கள் இருக்கின்றன. அவற்றை அவனையன்றி வேறெவரும் அறிவதில்லை. நிலத்திலும் கடலிலுமுள்ளதை அவன் அறிகின்றான். அவன் அறியாமல் ஓரிலையும் உதிருவதில்லை. பூமியின் ஆழிருள்களிலுள்ள தானியமும் ஈரமானதும், காய்ந்ததும் (ஆன எல்லாம் மிகவும்) தெளிவான (அவனுடைய) நூலில் (பதிவு செய்யப்பட்டு) உள்ளது. (6:60)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 09 April 2020 Issue No. 15

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஒவ்வொரு அஹ்மதியின் முகத்திற்குப் பின்னால் அஹ்மதிய்யத்தின், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மற்றும் இஸ்லாத்தின் கண்ணியம் இருக்கின்றது

தன்ஸானிய்யாவில் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27–29 ஆகிய நடைபெற்ற 50 வது ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வழங்கிய சிறப்பான தூதுச் செய்தி

அன்பிற்குரிய தன்ஸானிய்யா ஜமாஅத் உறுப்பினர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வ வரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு

2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27,28 மற்றும் 29 ஆகிய நாட்களில் நீங்கள் உங்களது ஆண்டு மாநாட்டை நடத்துகின்றீர்கள் என்பதை அறிந்து எனக்கு மிக்க மிகிழ்ச்சி.

எனது துஆ என்னவென்றால், அல்லாஹ் இந்த மாநாட்டிற்கு மகத்தான வெற்றிகளை வழங்குவானாக. மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரும் ஆன்மீக அருட்களிலிருந்து அருள் பெறுவார்களாக. மேலும் நீங்கள் அனைவரும் நன்மை, கலப்பற்றத்தன்மை மற்றும் இறையச்சத்தில் முன்னேற்றமடைந்து கொண்டே செல்வீர்களாக. ஆமீன்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்த பிறகு அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள அருட்கள் மற்றும் பரக்கத்துகளில் மிகத்தான ஓர் அருள், இந்த இஜ்திமா ஆகும். இதனை நாம் ஆண்டு மாநாடு என்று கூறுகின்றோம். இதிலிருந்து இது நமது ஆன்மீக மற்றும் நல்லொழுக்கத்தின் தரத்தை உயர்த்துவதற்கும், தமது உள்ளங்களை தூய்மையாக்குவதற்கும், நமது அறிவை வளர்த்துக் கொள்வதற்கும், அதேபோன்று அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதற்குமுரிய ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும். இதன் மூலம் நாம் இறையச்சத்தில் முன்னேற்றம் அடைகின்றோம்.

இந்த மூன்று நாட்களில் நாம் உலகத்தின் மீதான அன்பை முற்றிலும் துறந்து விட்டு அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களின் மீதான அன்பிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். மேலும் தம்மைப் படைத்தவனை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

எனவே இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ள ஒவ்வொருவரும், அவர் ஆணோ அல்லது பொண்னோ இந்த விஷயத்தை தமது சிந்தனையில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது மாநாட்டின் நோக்கம் இறை திருப்தியை பெறுவதே ஆகும். ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக உங்களது கலப்பற்ற எண்ணமும் இதுவாகவே இருக்க வேண்டும்.

நீங்கள் மாநாட்டில் கலந்து கொண்டு இறையச்சத்தில் முன்னேறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தியவாறு மற்றவர்களின் உரிமைகளை செலுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். இந்த எண்ணம் இல்லையென்றால் பிறகு மாநாட்டில் கலந்து கொள்வது எவ்வித பயனையும் தராது.

அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகள் நல்ல செயல்களை வெளிப்படுத்திக் காட்டுவதற்காகவும், நற்செல்களை செய்வதன் பக்கம் கவனமூட்டுவதற்காகவும் உலகத்தின் மூலை முடுக்குகளிலெள்ளலாம் நமது மாநாடுகள் நடத்தப்படுகின்றன.

நமது ஒவ்வொருவரின் செயலும் அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப வெளிப்பட வேண்டும் என்பதற்காக ஓர் ஆன்மீக சுற்றுச்சூழல் நமக்காக ஆயத்தமாக்கப்படுகிறது.

இந்த நோக்கத்தை அடைவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு முறை இவ்வாறு கூறினார்கள்:

நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் கலப்பற்ற அடியார்கள் யார் என்றால் அவர்களைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான். அதாவது கொடுக்கல் வாங்கல் தொடர்புகளோ, வணிகத் தொழிலோ அல்லாஹ்வை நினைவு கூருவதிலிருந்தும் (அவர்களை) கவனமற்றவர்களாக்குவதில்லை. (24:38)

எனவே அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருங்கள். மாநாட்டின்போதும், இடைவெளியின்போதும் மற்றும் இரவிலும் துஆக்கள் செய்யுங்கள்.

ஒரு உறுதியான உடன்படிக்கையை எடுங்கள். அதாவது நாங்கள் உனது திருப்தியை அடைவதற்கும், அதிகமாக உன்னை நினைவு கூருவதற்கும், உனது அன்பைப் பெறுவதற்கும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருக்கின்றோம். நீ இந்த மாநாட்டிற்காக வைத்துள்ள அனைத்து அருட்களையும் எங்களுக்கு வழங்குவாயாக. மேலும் நீ விரும்புகின்ற தூய மாற்றத்தை எங்களிடம் ஏற்படுத்துவாயாக.

இதற்காகவே நீ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பேரன்பரை உலகிற்கு அனுப்பி இருக்கின்றாய். எனவே நாங்கள் உண்மையான உள்ளத்துடன் அவரது பைஅத்தில் இணையக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

மாநாட்டின் இந்த மூன்று நாட்களுக்குப் பிறகு நீங்கள் உலக விவகாரங்களின் பக்கம் திரும்புவீர்கள். நீங்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவராக திகழும்போதுதான் இந்த மாநாட்டில் கலந்து கொண்டதும் உங்களுக்கு பயனளிக்கக் கூடியதாக இருக்கும்.

ஒவ்வொரு நிலையிலும் மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். மேலும் எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். ஒவ்வொரு அஹ்மதியின் முகத்திற்குப் பின்னால் அஹ்மதிய்யத்தின், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மற்றும் இஸ்லாத்தின் கண்ணியம் இருக்கின்றது.

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad